SRI LANKA

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் III பரீட்சை – ஜூலை 2026
# (Level III Examination – July 2026)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (3801) நிதி அறிக்கையிடல் (FAR)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள˙ கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
## மட்டம் 03 பரீட்சை – ஜூலை 2026
## (3801) நிதி அறிக்கையிடல்
## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
**(மொத்த புள்ளிகள் 20)**

**பிரிவு – A**

## *முதலாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

*அத்தியாயம் 01*

(a) **தொடர்புடையதன்மை (Relevance)**

ஒரு தகவல் ஒரு தீர்மானத்தின் மீது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தும் திறன் கொண்டதாக இருந்தால், அத்தகைய தகவல் தொடர்புடைய தகவலாகக் கருதப்படுகிறது. தொடர்புடையதன்மை ஒரு தகவலின் முன்கணிப்புப் பெறுமதி, உறுதிப்படுத்தும் பெறுமதி மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றில் தங்கியிருக்கும்.

**உண்மையான பிரதிநிதித்துவம் (Faithful representation)**

நிதிக்கூற்றுக்கள் பொருளாதார நிகழ்வுகளை வார்த்தைகள் மற்றும் எண்களில் குறிப்பிட வேண்டும். ஒரு தகவலின் உண்மையான பிரதிநிதித்துவம் முழுமைத்தன்மை, பக்கச்சார்பின்மை அல்லது நடுநிலைமை மற்றும் தவறுகளிலிருந்து விடுபட்டிருத்தல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

**(03 புள்ளிகள்)**

(b) நிதிக் கூற்றுக்கள், வணிகங்கள் எதிர்வரும் காலத்தில் தொடர்ந்து இயங்கும் என்ற தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. எனவே, நிறுவனம் அதனைக் கலைக்கவோ அல்லது செயற்பாடுகளின் அளவைக் கணிசமாகக் குறைக்கவோ எந்த உத்தேசத்தையோ அல்லது தேவையையோ கொண்டிருக்கவில்லை என்று கருதப்படுகிறது. அதன்படி, நிதிநிலைமைக் கூற்றிலுள்ள சொத்துகள் மற்றும் பரிப்புகள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதவை என வகைப்படுத்தப்படுகின்றன.

**(02 புள்ளிகள்)**
**(மொத்தம் 05 புள்ளிகள்)**

aat SRI LANKA

## இரண்டாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

***அத்தியாயம் 01***

**(a)**

- நிறுவனத்தின் கடந்தகால செயற்திறன் மற்றும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) முன்முயற்சிகள் தொடர்பாக எதிர்காலத்திற்கான பார்வை குறித்து அக்கறைதாரர்களுக்கு தகவல்களை வழங்குதல்.
- விதிகள், நியமங்கள் மற்றும் செயற்திறன் நியமங்கள் தொடர்பாக நிலைபேறான செயற்திறனை அளவிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- ஒரு நிறுவனம் நிலைபேறான அபிவிருத்தி எதிர்பார்ப்புகளைப் பாதிக்கும் மற்றும் அத்தகைய எதிர்பார்ப்புகள் நிறுவனத்தைப் பாதிக்கும் முறையினை நிரூபித்தல்.
- காலப்பகுதிகளிடையே மற்றும் வெவ்வேறு நிறுவனங்களுக்கு இடையில் செயற்திறனை ஒப்பிடுதல்.
- ஒரு நிறுவனத்தின் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) தாக்கங்களைத் தொடர்பாடல் செய்தல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை இயக்குதல்.
- ESG இடர்கள் மற்றும் வாய்ப்புகளை நிர்வகித்தல்.

(ஒரு நோக்கம் மட்டும் போதுமானது)

**(02 புள்ளிகள்)**

**(b)**

- அறிக்கையிடும் உரிமம்
- தொடர்புபட்ட தகவல்கள்
- நியாயமான முன்னிலைப்படுத்தல்
- பொருண்மை
- வழிகாட்டுதலின் மூலங்கள்
- வெளிப்படுத்தல்களின் அமைவிடம்
- அறிக்கையிடலின் காலப்பகுதி
- ஒப்பீட்டுத் தகவல்கள்
- இணக்கப்பாட்டுக் கூற்று
- சுயதீர்ப்புகள், நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் தவறுகள்
- முக்கிய சம்மதம்
- நிலைபேறானதன்மை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள்

(மூன்று விடைகள் மட்டும் போதுமானது)

**(03 புள்ளிகள்)**
**(மொத்தம் 05 புள்ளிகள்)**

aat SRI LANKA

## *மூன்றாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**அத்தியாயம் 06**

**(a)**

- நிதித் தகவல்களைப் பதிவு செய்தல்
- பொதுப் பேரேட்டைப் பராமரித்தல்
- வருமதிகள் கணக்கு முகாமை
- சென்மதிகள் கணக்கு முகாமை
- ஊதியச் செயலாக்கம்
- இருப்பு முகாமை
- வங்கி இணக்கப்படுத்தல்கள்
- பரீட்சைமீதி தயாரித்தல்
- நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்
- வரி முகாமை
- பாதீடு மற்றும் முற்துணிவு
- ஒருங்கிணைப்பு திறன்கள்
- பயனர் அணுகல் கட்டுப்பாடு

(இரண்டு விடைகள் மட்டும் போதுமானது)

**(02 புள்ளிகள்)**

**(b)**

- **அதிகரித்த செயற்திறன்**

  கணக்கியல் மற்றும் அறிக்கையிடலின் தன்னியக்கமாக்கல் மனித வளங்களின் பயன்பாடு மற்றும் நிலையான செலவைக் குறைக்கும். எனவே, நிதிக் கூற்றுக்களை உருவாக்குவதில் செயற்திறன் அதிகமாக இருக்கும்.

- **குறைக்கப்பட்ட தாமதங்கள்**

  தன்னியக்கமாக்கல் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தலை அதிகரிக்கும். எனவே, கைமுறை நிதி அறிக்கையிடலில் பொதுவான தாமதங்கள் குறைக்கப்படும். இது தீர்மானம் மேற்கொள்வோர் விரைவாகத் தீர்மானங்களை மேற்கொள்ள உதவும்.

- **மனிதத் தவறுகளின் குறைப்பு**

  பொதுவாக, கைமுறை நிதி அறிக்கையிடல் செயன்முறையில், விடுபாடுகள், பிறழ்கூற்றுக்கள் போன்ற மனிதத் தவறுகள் ஏற்படலாம். தன்னியக்கமாக்கல் செயன்முறை இந்த மனிதத் தவறுகளை நீக்கி, நிதிக் கூற்றுக்களை மிகவும் துல்லியமானதாகவும் நம்பகமானதாகவும் மாற்றும்.

- **நிகழ்நேர நிதித் தகவல்களை வழங்குதல்**

  கைமுறை நிதி அறிக்கையிடல் செயன்முறைக்கு நிதித் தகவல்களை கைமுறையாக செயலாக்க வேண்டும். இருப்பினும், தன்னியக்கமாக்கல் வணிகத்திற்கு நிகழ்நேர நிதித் தகவல்களை உருவாக்க உதவும்.

- **அதிகரித்த அறிக்கையிடல் தரம்**

  தன்னியக்கமான நிதி அறிக்கையிடல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்துவதில் நியமமாக்கல் மற்றும் நிலையானதன்மையைப் பராமரிக்கும். இது அறிக்கையிடல் தரத்தை மேம்படுத்தும்.

- **அகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துகிறது**

  தன்னியக்க நிதி அறிக்கையிடல் செயன்முறையானது, தரவுகளை அணுகுவதிலும் பதிவு செய்வதிலும் அகக் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியிருக்கலாம். மேலும், கடமைகளைப் பிரித்தல் மற்றும் பொது மற்றும் பயன்பாட்டுத் தகவல் தொழிநுட்பக் கட்டுப்பாடுகள் உட்பொதிக்கப்படலாம்.

- **விரைவான வங்கி இணக்கப்படுத்தல்கள்**

  கையேட்டுமுறை வங்கி இணக்கப்படுத்தல்களுடன் ஒப்பிடும்போது, தன்னியக்க வங்கி இணக்கப்படுத்தல்கள் விரைவானதாக இருக்கும்.

- **ஒருங்கிணைப்பை செயற்படுத்துகிறது**

  தன்னியக்க நிதி அறிக்கையிடல், பரிவர்த்தனை செயலாக்கம், இருப்பு முகாமை, ஊதிய முகாமை, வங்கியியல் போன்றவற்றின் ஒருங்கிணைப்பை செயற்படுத்தும்.

- **அளவிடுதல் மற்றும் நெகிழ்வுத்தன்மை**

  தன்னியக்கத் தளங்கள் அதிகரிக்கும் பரிவர்த்தனை அளவுகள், பல்-நிறுவன கட்டமைப்புகள், மற்றும் வளரும் வணிக மாதிரிகளுக்கு எளிதில் ஏற்படுகின்றன. ERP முறைமைகள் மற்றும் மேகத்தளத் தீர்வுகளுடனான ஒருங்கிணைப்பு, விரிவாக்கத்தை ஆதரிப்பதுடன், பல்வேறு கட்டமைப்புகள் மற்றும் அதிகார வரம்புகளில் அறிக்கையிடலை எளிதாக்குகிறது.

(இரண்டு நன்மைகள் மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றன)

**(03 புள்ளிகள்)**
**(மொத்தம் 05 புள்ளிகள்)**

SRI LANKA

## *நான்காவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

**அத்தியாயம் 02**

**(a)**

- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற கம்பனிகள்.
- 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் காப்புறுதி வணிகத்தை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்ட கம்பனிகள்.
- குத்தகை வணிகத்தை மேற்கொள்ளும் நிறுவனங்கள்.
- காரணிப்படுத்தல் நிறுவனங்கள்.
- 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்.
- 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அலகுப் பொறுப்பாட்சி வியாபாரத்தை கொண்டுநடாத்த அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்.
- நிதி முகாமை நிறுவனங்கள்.
- 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பங்கு தரகர்கள் அல்லது பங்கு விற்பனையாளர்களாக வணிகம் செய்ய உரிமம் பெற்ற நிறுவனங்கள்.
- 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்குச் சந்தையை இயக்க உரிமம் பெற்ற நிறுவனங்கள்.
- 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள்.
- குறிப்பிட்ட வரையறைகளை விஞ்சும் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகள்
- வருடாந்தப் புரள்வு ரூ. 500 மில்லியனை விஞ்சிய கம்பனிகள்.
- முந்தைய நிதியாண்டின் இறுதியில் ரூ. 100 மில்லியனுக்கும் அதிகமான பங்குதாரர் உரிமையாண்மையைக் கொண்ட நிறுவனங்கள்.
- முந்தைய நிதியாண்டின் இறுதியில் ரூ. 300 மில்லியனுக்கும் அதிகமான மொத்த சொத்துகளைக் கொண்ட நிறுவனங்கள்.
- முந்தைய ஆண்டின் இறுதியில் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுக்கு ரூ. 100 மில்லியனுக்கும் அதிகமான பொறுப்புகளைக் கொண்ட நிறுவனங்கள்.

aat SRI LANKA

- 1,000 ஊழியர்களுக்கு மேல் ஊழியா்களைக் கொண்ட நிறுவனங்கள்.
- பொருட்களை விற்பனை செய்வதில் அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பொதுக் கூட்டுத்தாபனங்கள்.

(மூன்று வகைகள் மட்டும் போதுமானது)

**(03 புள்ளிகள்)**

**(b)**

- அதிகரித்த ஒப்பீட்டுத்தன்மை
- அதிகரித்த நம்பகத்தன்மை
- தவறான கையாள்கைகளுக்கு குறைந்த வாய்ப்பளிக்கும் அதிகரித்த துல்லியம்
- சிறந்த தீர்மானம் மேற்கொள்ளலுக்கு அக்கறைதாரர்களுக்கு உதவுதல்
- கணக்கியல் சிக்கல்களைத் தீர்த்தல்
- நிதி அறிக்கையிடலில் அதிகரித்த நிலைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு
- நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பவர்களுக்கு உதவுதல்
- ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது எளிதானது
- கணக்காய்வாளர்களுக்கு உதவுதல்
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்
- முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்துதல்

(இரண்டு முக்கியத்துவங்கள் மட்டும் எதிர்பார்க்கப்படுகின்றன)

**(02 புள்ளிகள்)**
**(மொத்தம் 05 புள்ளிகள்)**

aat SRI LANKA

***பகுதி A முற்றும்***

## ஐந்தாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 03**

**சன் (Pvt) Ltd.**
**2026 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

(ரூ. "000)

| | | |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம; (PAT 1,200 + வரி 450) | | 1,650 |
| +/- சீராக்கங்கள் | | |
| இயந்திரம் அகற்றல் நட்டம் - **செய்கை 2** | | 300 |
| வட்டிச் செலவினம் | | 175 |
| பணிக்கொடைச் செலவினம் - **செய்கை 3** | | 320 |
| பெறுமானத் தேய்வு – **செய்கை 2** | | 3,100 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான காசுப் பாய்ச்சல்** | | **5,545** |
| (-) பணிக்கொடை செலுத்தப்பட்டது | | (250) |
| (-) வரி செலுத்தப்பட்டது – செய்கை 1 | | (400) |
| | | **4,895** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்:** | | |
| இருப்புக்களின் அதிகரிப்பு | (700) | |
| வியாபார மற்றும் பிற வருமதிகளிலான அதிகரிப்பு | (400) | |
| வியாபார மற்றும் பிற சென்மதிகளிலான அதிகரிப்பு | 280 | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான நிகர காசுப் பாய்ச்சல் | | 4,075 |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| இயந்திர அகற்றல் வருமானம் | 1,800 | |
| இயந்திரக் கொள்வனவு – **செய்கை 2** | (6,500) | |
| முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான நிகர காசுப் பாய்ச்சல் | | **(4,700)** |
| **நிதியீட்ட நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பெறப்பட்ட கடன்கள் | 1,200 | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (200) | |
| செலுத்தப்பட்ட வட்டி | (175) | |
| நிதியீட்ட நடவடிக்கைகளின் மூலமான நிகர காசுப் பாய்ச்சல் | | 825 |
| ஆண்டிற்கான நிகர காசுப் பாய்ச்சல் | | **200** |
| ஆரம்பக் காசு மற்றும் காசுக்கு சமமானவை | | 1,900 |
| இறுதிக் காசு மற்றும் காசுக்கு சமமானவை | | **2,100** |

**செய்கைகள்**

**செய்கை 1 – ஆண்டிற்கான வரிச் செலவு**

செலுத்த வேண்டிய வரிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 400 | மீதி முன்கொண்டு வந்தது | 900 |
| மீதி முன்கொண்டு சென்றது | 950 | வரிச் செலவினம் | 450 |
| | 1,350 | | 1,350 |

நிறுத்திவைத்த இலாபம்

| | | | |
|---|---|---|---|
| பங்கிலாபம் | 200 | மீதி முன்கொண்டு வந்தது | 3,200 |
| மீதி முன்கொண்டு சென்றது | 4,200 | வரிக்குப் பின்னரான இலாபம் | 1,200 |
| | 4,400 | | 4,400 |

**செய்கை 2 – இயந்திர அகற்றல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| மீதி முன்கொண்டு வந்தது | 22,400 | அகற்றல் இலாப நட்டம் | 4,000 |
| காசு | 6,500 | மீதி முன் கொண்டு வந்தது | 24,900 |
| | 28,900 | | 28,900 |

திரண்ட தேய்மானம்

| | | | |
|---|---|---|---|
| அகற்றல் இலாப நட்டம் | 1,900 | மீதி முன்கொண்டு வந்தது | 4,200 |
| மீதி முன்கொண்டு சென்றது | 5,400 | தேய்மானம் | 3,100 |
| | 7,300 | | 7,300 |

அகற்றல் இலாபம் அல்லது நட்டம்

| | | | |
|---|---|---|---|
| இயந்திரம் | 4,000 | திரண்ட தேய்மானம் | 1,900 |
| காசு | 1,800 | | |
| இலாபம் அல்லது நட்டம் | 300 | | |
| | 4,000 | | 4,000 |

**செய்கை 3 – பணிக்கொடை செலவினம்**

பணிக்கொடை ஒதுக்கீடு

| | | | |
|---|---|---|---|
| காசு | 250 | மீதி முன்கொண்டு வந்தது | 380 |
| மீதி முன்கொண்டு சென்றது | 450 | பணிக்கொடை செலவு | 320 |
| | 700 | | 700 |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

aat SRI LANKA

## ஆறாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 02**

**(A)**

(ரூ. "000)

| செயற்திறன் கடமைகள் | தனி விலைகள் | பரிவர்த்தனை விலை ஒதுக்கீடு | ஒப்பந்த விலை | 2025/26 ஆம் ஆண்டிற்கான வருமானம் | 2026/27 ஆம் ஆண்டிற்கான வருமானம் |
|---|---|---|---|---|---|
| தனிப் பயனாக்கப்பட்ட மென்பொருள் (தனித்துவமானது) | 2,700 | 2,700/3,600 x 3,000 = 2,250 | 2,250 | நிறுவலின் போது ஏற்பிசைத்த வருமானம் 2,250 | எதுவுமில்லை |
| ஆதரவு சேவைகள் | 25 x 36 = 900 | 900/3,600 x 3,000 = 750 | 750 | 3 ஆண்டுகளில் சேவை வருமானம் (750/3) 250 | 3 ஆண்டுகளில் சேவை வருமானம் (750/3) 250 |
| மொத்தம் | 3,600 | 3,000 | 3,000 | 2,500 | 250 |

**31.03.2026 இல் முடிவடைந்த ஆண்டிற்கு ஏற்பிசைக்கப்படும் வருமானம்: ரூபா. 2,500,000**
**31.03.2027 இல் முடிவடைந்த ஆண்டிற்கு ஏற்பிசைக்கப்படும் வருமானம்: ரூபா 250,000**

**(05 புள்ளிகள்)**

(B) **மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்படுகைக் கிரயங்கள்**

| | ரூ. "000 | ரூ. "000 |
|---|---|---|
| **கடன் A (குறித்துரைத்த கடன்)** | | |
| கடன் தொகை | 20,000 | |
| வட்டி வீதம் | 10% | |
| காலம் (1/7/25 – 31/3/26) | 9/12 | |
| வட்டிச் செலவு (20,000 x 10% x 9/12) | 1,500 | |
| (-) வட்டி வருமானம் | (400) | |
| குறித்துரைத்த கடனிலிருந்தான நிகர வட்டி | | 1,100 |
| **கடன் B (நிதிக் குவிப்பு)** | | |
| கடன் தொகை | 40,000 | |
| வட்டி வீதம் | 12% | |
| காலம் (1/7/25 – 31/3/26) | 9/12 | |
| நிதிக் குவிப்பின் மொத்த வட்டிச் செலவு (40,000 x 12% x 9/12) | | 3,600 |
| மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்படுகைக் கிரயங்கள் | | 4,700 |

**(05 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

aat SRI LANKA

## ஏழாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 02**

(அ)

(ரூ. "000)

| விபரம் | நிலம் | மோட்டார் வாகனம் | பணிக் கொடை | மொத்தம் |
|---|---|---|---|---|
| கணக்கியல் கொண்டுசெல் பெறுமதி | 120,000 | 60,000 | (12,000) | 168,000 |
| (-) வரி அடிப்படை **செய்கை 1,செய்கை 2** | (120,000) | (50,000) | - | (170,000) |
| **(a)** தற்காலிக வேறுபாடு | - | 10,000 | (12,000) | (2,000) |
| வரி விதிக்கத்தக்க / கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடு | N/A | கழிக்கத் தகு தற்காலிக வேறுபாடு | கழிக்கத் தகு தற்காலிக வேறுபாடு | கழிக்கத் தகு தற்காலிக வேறுபாடு |
| வரி வீதம் | | | | 30% |
| **(b) இறுதி பிற்போட்ட வரிச் சொத்து** | | | | 600 |

**செய்கை 1 – நிலம் மற்றும் மோட்டார் வாகனங்களின் வரி அடிப்படை**

| விபரம் | நிலம் | மோட்டார் வாகனம் |
|---|---|---|
| கிரயம் | 120,000 | 90,000 |
| (-) திரண்ட மூலதன விடுதொகைகள் | - | (40,000) |
| வரி அடிப்படை | 120,000 | 50,000 |

**செய்கை 2 – பணிக்கொடையின் வரி அடிப்படை**

| விபரம் | பணிக்கொடை |
|---|---|
| கொண்டு செல்லும் பெறுமதி | 12,000 |
| (-) பரிப்பு தீர்க்கப்படும்போது வரி நோக்கத்திற்காக கழிக்கத்தக்க தொகை | (12,000) |
| வரி அடிப்படை | - |

**(05 புள்ளிகள்)**

**(B)** (1) **சீராக்கும் நிகழ்வு**

மிகையூதியம் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபங்களிலிருந்து செலுத்தப்படுவதுடன், நிறுவனம் வழக்கமாகவே மிகையூதியத்தை செலுத்தி வருகிறது. எனவே, 2026 மார்ச் 31 அன்று உள்ளபடி ஒரு ஆக்கபூர்வமான கடமை உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2026 ஏப்ரல் 5 அன்று இயக்குநர்களால் அங்கீகரிக்கப்பட்ட மிகையூதிய செலுத்துதல் ஒரு சீராக்கும் நிகழ்வாகும்.

(2) **சீராக்கும் நிகழ்வு**

மோசடி 2026 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டில் நடந்துள்ளது. இது 2026 மே 10 அன்று வெளிப்படுத்தப்பட்டது, இது இயக்குநர்கள் சபையினால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்ததாகும். எனவே, அறிக்கையிடல் காலத்தின் படி நிலவும் சூழ்நிலைகள். அதன்படி, இது ஒரு சீராக்கும் நிகழ்வாவதுடன், இருப்பு மிகைப்படுத்தல் 2026 மார்ச் 31 இன்று முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும்.

**(05 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

aat SRI LANKA

***பகுதி B முற்றும்***

| மூன்று (03) கட்டாய வினாக்கள் (மொத்த புள்ளிகள் 50) | பிரிவு – C |
|---|---|

## எட்டாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 03**

(a)

**ஓ'ானிக் சிமெண்ட் PLC**
**2026 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான**
**இலாப நட்டம் மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று**

ரூ. "000

| | | |
|---|---|---|
| விற்பனை | | 720,000 |
| கழி: விற்பனைக் கிரயம் (520,000 + 3,600) | | (523,600) |
| **மொத்த இலாபம்** | | **196,400** |
| ஏனைய வருமானம் (செய்கை - 2) | | 5,625 |
| | | |
| **கழி: செலவுகள்:** | | |
| விநியோகச் செலவினங்கள் (செய்கை - 3) | 37,950 | |
| நிர்வாகச் செலவினங்கள் (செய்கை - 4) | 75,850 | |
| நிதிச் செலவினங்கள் (செய்கை - 5) | 6,540 | (120,340) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **81,685** |
| வருமான வரி | | (9,250) |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | | **72,435** |
| ஏனைய முற்றடக்க வருமானம் | | - |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | | **72,435** |

**(09 புள்ளிகள்)**

(b)

**ஓ'ானிக் சிமெண்ட் PLC**

**2026 மார்ச் 31 அன்று உள்ளவாறான**

**நிதிநிலைமைக் கூற்று**

(ரூ. "000)

| | | |
|---|---|---|
| சொத்துகள் | | |
| **நடைமுறையல்லா சொத்துகள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | 183,200 |
| **நடைமுறை சொத்துகள்** | | |
| இருப்பு | 91,400 | |
| வியாபார வருமதிகள் (88,000 – 1,500 – 8,650) | 77,850 | |
| வருமதி வட்டி | 125 | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 19,357 | 188,732 |

| | | |
|---|---|---|
| **மொத்த சொத்துகள்** | | **371,932** |
| | | |
| **உரிமையாண்மை மற்றும் பரிப்புகள்** | | |
| **உரிமையாண்மை** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 250,000 | |
| நிறுத்திவைத்த இலாபங்கள் | 75,435 | 325,435 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | |
| குத்தகைக் கடன் கொடுத்தோர் (செய்கை - 6) | 3,903.73 | 3,903.73 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| வியாபார சென்மதிகள் | 33,000 | |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் (செய்கை - 6) | 1,093.27 | |
| சென்மதி வருமான வரி (செய்கை - 1) | | 8,250 |
| அட்டுறு செலவினங்கள் | 250 | 42,593.27 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புகள்** | | **371,932** |

(c)

**ஓ'ானிக் சிமெண்ட் PLC**

**2026 மார்ச் 31 இன்று முடிவடைந்த ஆண்டிறகான**

**உரிமையாண்மை மாற்றங்களின் அறிக்கை**

(ரூ. "000)

| **விபரம்** | **கூறப்பட்ட மூலதனம்** | **நிறுத்திவைத்த இலாபங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| 01.04.2025 அன்று உள்ளவாறான மீதி | 250,000 | 15,000 | 265,000 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | (12,000) | (12,000) |
| ஆண்டிற்கான இலாபம் | - | 72,435 | 72,435 |
| 31.03.2026 அன்று உள்ளவாறான மீதி | **250,000** | **75,435** | **325,435** |

aat SRI LANKA

(d)

**ஓ'ானிக் சிமென்ட் PLC**

**2026 மார்ச் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான PPE நகர்வுக் கூற்று**

(ரூ. "000)

| | **காணி** | **கட்டடங்கள்** | **இயந்திரங்கள்** | **மோட்டார் வாகனங்கள்** | **பயன்பாட்டு உரிமை சொத்து** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| கிரயம் / மறுமதிப்பீடு | | | | | | |
| 01.04.2025 அன்று மீதி | 80,000 | 60,000 | 90,000 | 22,000 | - | 252,000 |
| அகற்றல் | - | - | (20,000) | - | - | (20,000) |
| சேர்த்தல்கள் | - | - | - | - | 7,000 | 7,000 |
| | **80,000** | **60,000** | **70,000** | **22,000** | **7,000** | **239,000** |
| | | | | | | |
| **பெறுமானத் தேய்வு** | | | | | | |
| 01.04.2025 அன்று மீதி | - | 14,000 | 30,000 | 2,000 | - | 46,000 |
| அகற்றல் | - | - | (20,000) | - | - | (20,000) |
| தேய்மானம் | - | 1,500 | 22,500 | 4,400 | 1,400 | 29,800 |
| | **-** | **15,500** | **32,500** | **6,400** | **1,400** | **55,800** |
| | | | | | | |
| 31.03.2026 அன்று கொண்டு செல் பெறுமதி | | | | | | **183,200** |

**செய்கைகள்**

**(செய்கை - 1) சொத்து அகற்றல் கணக்கு**

| | |
|---|---|
| கிரயம் | 20,000 |
| இலாபம் / நட்டம் | 2,000 |
| | 22,000 |
| காசு | 2,000 |
| திரண்ட தேய்மானம் | 20,000 |
| | **22,000** |

**(செய்கை - 2) ஏனைய வருமானக் கணக்கு**

| | |
|---|---|
| பரீட்சை மீதி | 3,500 |
| அகற்றல் இலாபம் (செய்கை - 1) | 2,000 |
| வட்டி வருமானம் | 125 |
| | **5,625** |

**(செய்கை - 3) விநியோகச் செலவினக் கணக்கு**

| | |
|---|---|
| பரீட்சை மீதி | 28,000 |
| பயன்பாட்டு உரிமை சொத்தின் தேய்மானம் | 1,400 |
| மோட்டார் வாகனத்தின் தேய்மானம் | 4,400 |
| அறவிடமுடியாக் கடன்கள் | 1,500 |
| ஐயக் கடன் ஏற்பாடு (8,650 – 6,000) | 2,650 |
| | **37,950** |

**(செய்கை - 4) நிர்வாகச் செலவினக் கணக்கு**

| | |
|---|---|
| பரீட்சை மீதி | 51,600 |
| இயந்திரங்களின் தேய்மானம் | 22,500 |
| கட்டிடத்தின் தேய்மானம் | 1,500 |
| கணக்காய்வுக் கட்டணம் | 250 |
| | **75,850** |

**(செய்கை - 5) நிதி மற்றும் பிற செலவினக் கணக்கு**

| | |
|---|---|
| பரீட்சை மீதி | 6,000 |
| குத்தகை வட்டி | 540 |
| | **6,540** |

**(செய்கை - 6) குத்தகைக் கடன் வழங்குநர்கள்**

| ஆண்டு | ஆரம்ப மீதி | தவணைக் கட்டணங்கள் | வட்டி | மூலதனம் | இறுதி மீதி |
|---|---|---|---|---|---|
| 1 | 6,000,000 | 1,543,000 | 540,000 | 1,003,000 | 4,997,000 |
| 2 | 4,997,000 | 1,543,000 | 449,730 | 1,093,270 | 3,903,730 |
| 3 | 3,903,730 | 1,543,000 | 351,336 | 1,191,664 | 2,712,066 |
| 4 | 2,712,066 | 1,543,000 | 244,086 | 1,298,914 | 1,413,152 |
| 5 | 1,413,152 | 1,543,000 | 127,184 | 1,415,816 | - |

**(செய்கை - 7) வருமான வரி செலுத்த வேண்டிய கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 7,500 | மீதி முன்கொண்டு வந்தது | 6,500 |
| மீதி முன்கொண்டு சென்றது | 8,250 | இலாப நட்டம் | 9,250 |
| | **15,750** | | **15,750** |

aat SRI LANKA

## ஒன்பதாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 04**

**(a)**

| விகிதம் | சூத்திரம் | 31-03-2026 ஆண்டு இறுதி |
|---|---|---|
| (i) நடைமுறை விகிதம் | நடைமுறைச் சொத்துகள் : நடைமுறைப் பரிப்புகள் | = 425,000 : 200,000<br>= 2.125 : 1 |
| (ii) மொத்த இலாப எல்லை | மொத்த இலாபம் / விற்பனை x 100 | = 400,000/1,000,000 x 100 = 40% |
| (iii) நிகர இலாப எல்லை | வரிக்குப் பின் இலாபம் / விற்பனை x 100 | = 125,000/1,000,000 x 100 = 12.5% |
| (iv) இருப்பு வைத்தல் காலம் | சராசரி இருப்பு / விற்பனைக் கிரயம் x 365 | = [(150,000+120,000)/2]/600,000 x 365<br>= 82 நாட்கள் |
| (v) கடன்பட்டோர் சேகரிப்பு காலம் | சராசரி கடன்பட்டோர் / கடன் விற்பனை x 365 | = [(200,000+180,000)/2]/1,000,000 x 365<br>= 69 நாட்கள் |

**(05 புள்ளிகள்)**

**(a) 2026 மார்ச் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான மூன் PLC இன் விகித பகுப்பாய்வு எதிர் தொழிற்துறை சராசரிகள் தொடர்பான சுருக்க அறிக்கை**

aat SRI LANKA

**நடைமுறை விகிதம்**

மூன் PLC இன் நடைமுறை விகிதம் 2.125:1 ஆக இருப்பதுடன், இது தொழிற்துறை சராசரியான 1.8:1 ஐ விட சிறந்ததாகும். மூன் PLC தொழிற்துறையிலுள்ள பிற நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது சிறப்பான திரவத்தன்மை அளவைப் பேணுவதை இது காட்டுகிறது. 2:1 என்ற பொதுவான நடைமுறை விகிதம் மூன் PLC ஆல் பேணப்படுவதுடன், இது அவர்களின் குறுங்கால நிதிக் கடமைகளை முகாமை செய்ய உதவும்.

**மொத்த இலாப எல்லை மற்றும் நிகர இலாப எல்லை**

மூன் PLC இன் மொத்த இலாப எல்லை 40% ஆகும், இது தொழிற்துறை மொத்த இலாப எல்லையாகிய 35% ஐ விட சிறந்ததாகும். மூன் PLC வாடிக்கையாளர்களிடமிருந்து ஒரு உயர்வான விலையை வசூலிக்கிறது அல்லது விற்பனைக் கிரயத்தை முகாமை செய்வதில் அவர்களின் செயற்திறன் சிறப்பாக உள்ளதை இது காட்டுகிறது. இருப்பினும், மூன் PLC இன் நிகர இலாப எல்லை 12.5% ஆகும், இது தொழிற்துறையின் 15% நிகர இலாப

எல்லையை விடக் குறைவாக உள்ளது. மொத்த எல்லைகள் சிறப்பாக இருந்தாலும், நிறுவனம் நிர்வாக, விநியோக, நிதி, பிற மற்றும் வரிச் செலவுகள் போன்ற அதிக செயற்பாட்டு செலவுகளைக் கொண்டிருப்பதால் குறைந்த நிகர எல்லைகள் ஏற்படுகின்றன.

**இருப்பு வைத்தல் காலம் மற்றும் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்**

மூன் PLC இன் இருப்பு வைத்தல் காலம் 82 நாட்கள் ஆகும், இது தொழிற்துறை விகிதமான 75 நாட்களை விட அதிகமாகும். மூன் PLC இல் இருப்பு மேலதிகமாக ஒரு வாரத்திற்கு வைத்திருக்கப்படுவதை இது காட்டுகிறது. இது பலவீனமான இருப்பு முகாமை, நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்பு இடர் மற்றும் இருப்புகளில் பணம் முடக்கப்படுவதைக் காட்டுகிறது.

மூன் PLC இன் கடன்பட்டோர் சேகரிப்பு காலம் 69 நாட்களாக இருப்பதுடன், இது தொழிற்துறை விகிதமான 60 நாட்களை விட அதிகமாகும். நிறுவனத்தின் கடன்பட்டோர் சேகரிப்பு தொழிற்துறையை விட செயலற்றவை என்பதை இது காட்டுகிறது. இது அறவிட முடியாத கடன்பட்டோர் மற்றும் கடன்பட்டோர் சேத இழப்பு இடரை ஏற்படுத்தும்.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்**

## *பத்தாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**அத்தியாயம் 05**

**(a) நன்மதிப்பு கணக்கீடு**

| | ரூ. "000 | ரூ. "000 |
|---|---|---|
| முதலீட்டின் நியாயமான பெறுமதி | 90,000 | |
| நியாயமான பெறுமதியில் கட்டுப்பாடற்ற நாட்டம் | 18,000 | |
| மொத்த முதலீடு | | 108,000 |
| (-) நிகர சொத்துகளின் நியாயமான பெறுமதி | | |
| கூறப்பட்ட மூலதனம் | 60,000 | |
| நிறுத்திவைத்த இலாபம் | 10,000 | |
| காணியின் நியாயமான பெறுமதி ஆதாயம் | 7,000 | 77,000 |
| நன்மதிப்பின் பெறுமதி | | 31,000 |

**(04 புள்ளிகள்)**

aat SRI LANKA

(b)

**கலக்ஸி PLC**
**2025 மார்ச் 31 அன்று உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | ரூ. "000 | ரூ. "000 |
|---|---|---|
| **நடைமுறையல்லா சொத்துகள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - **செய்கை 1** | 202,000 | |
| நன்மதிப்பு (+90,000 - 7,000 + 18,000 - 70,000 - 7,000) | 24,000 | |
| ஸ்டார் PLC இல் முதலீடு (-90,000) | - | 226,000 |
| **நடைமுறை சொத்துகள்:** | | |
| இருப்பு (+2,000 - 400) | 41,600 | |
| வியாபார வருமதிகள் | 38,000 | |
| கேலக்ஸி PLC இலிருந்து வருமதி (- 2,000 + 5,000) | - | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 21,000 | 100,600 |
| மொத்த சொத்துகள் | | **326,600** |
| **உரிமையாண்மை** | | |
| கூறப்பட்ட மூலதனம் (-60,000) | 150,000 | |
| நிறுத்திவைத்த இலாபம் - **செய்கை 7** | 20,680 | |
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு உரித்தான உரிமை | 170,680 | |
| கட்டுப்பாடற்ற நாட்டம் - **செய்கை 8** | 16,920 | 187,600 |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | |
| நீண்டகால கடன் | 79,500 | 79,500 |
| **நடைமுறை பொறுப்புகள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 52,000 | |
| ஸ்டார் PLC க்கு செலுத்த வேண்டிய தொகை (-3,000) | - | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 7,500 | 59,500 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | | **326,600** |

**செய்கை 01 – காணி நியாயமான பெறுமதி ஆதாயம்**

| | ரூபா 000 |
|---|---|
| காணியின் நியாயமான பெறுமதி | 75,000 |
| காணியின் ஏட்டுப் பெறுமதி | (68,000) |
| காணியின் நியாயமான பெறுமதி ஆதாயம் | **7,000** |

**செய்கை 02 – சேய்க் கம்பனியின் நிகர சொத்துகள்**

| | **கையகப்படுத்த முன்** | **கையகப்படுத்திய பின்** | **அறிக்கையிடல் திகதி** |
|---|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | 60,000 | - | 60,000 |
| நிறுத்திவைத்த இலாபம் | 10,000 | 2,000 | 12,000 |
| | 70,000 | 2,000 | 72,000 |
| கையகப்படுத்தலின் பின்னரான நிகர சொத்துகளின் கட்டுப்பாடற்ற நாட்டத்தின் பங்கு (2,000 x 20%) | - | 400 | |

**செய்கை 03 – கம்பிகளிடையிலான மீதிகளின் நீக்கம்**

| | **ரூபா 000** |
|---|---|
| கலக்ஸி PLC இலிருந்து பெற வேண்டிய தொகை | 5,000 |
| ஸ்டார் PLC க்கு செலுத்த வேண்டிய தொகை | 3,000 |
| வழியில் உள்ள பொருட்கள் | **2,000** |

**செய்கை 04 – இருப்பு மீதான உணரப்படாத இலாபங்கள் (விற்பனையாளர் சேய்க் கம்பனி)**

| | **ரூபா 000** |
|---|---|
| இருப்பு | 2,000 |
| இலாப எல்லை (விற்பனை விலை 125 = கிரயம் 100 + இலாபம் 25) | 25% |
| உணரப்படாத இலாபம் (2,000/125x25) | 400 |
| தாய்க் கம்பனிக்குரிய உணரப்படாத இலாபம் (400 x 80%) | 320 |
| NCI க்கு உரிய உணரப்படாத இலாபம் (400 x 20%) | 80 |

aat SRI LANKA

**செய்கை 05 – நன்மதிப்பு சேத இழப்பு (நியாயமான பெறுமதியில் NCI)**

| | **ரூபா 000** |
|---|---|
| நன்மதிப்பு சேத இழப்பு | 7,000 |
| நன்மதிப்பு சேத இழப்பு – தாய்க் கம்பனியின் பங்கு (7,000x80%) | 5,600 |
| நன்மதிப்பு சேத இழப்பு – NCI இன் பங்கு (7,000x20%) | 1,400 |

**செய்கை 06 – காணி அகற்றலின் உணரப்படாத இலாபங்கள் (விற்பனையாளர் - தாய்க் கம்பனி)**

| | **ரூபா 000** |
|---|---|
| அகற்றல் மதிப்பு | 15,000 |
| கொண்டு செல்லல் பெறுமதி | 10,000 |
| உணரப்படாத இலாபம் | 5,000 |

**செய்கை 07 – ஒன்றித்த நிறுத்திவைத்த இலாபம்**

| | | | |
|---|---:|---|---:|
| உணரப்படாத இலாபம் (400x80%) | 320 | மீதி முன்கொண்டு வந்தது | 30,000 |
| காணியின் இலாபம் | 5,000 | பின்னைய இலாபம் (2,000 x 80%) | 1,600 |
| நன்மதிப்பு | 5,600 | | |
| மீதி முன்கொண்டு சென்றது | 20,680 | | |
| | **31,600** | | **31,600** |

**செய்கை 08 – கட்டுப்பாடற்ற நாட்டம்**

| | | | |
|---|---:|---|---:|
| உணரப்படாத இலாபம் (400x25%) | 80 | மீதி முன்கொண்டு வந்தது | 18,000 |
| நன்மதிப்பு | 1,400 | | |
| மீதி முன்கொண்டு சென்றது | 16,920 | பின்-இலாபம் (2,000 x 20%) | 400 |
| | **18,400** | | **18,400** |

**(11 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**பிரிவு C முடிவு**

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*